உ

சிவமயம்




நவாலியை வசிப்பிடமாகக் கொண்ட

## அமரர் திருமதி. அதிசயராசா புஸ்பமலர்

அவர்களின் நினைவுகளைத் தாங்கிய

# நினைவு மலர்

**21.01.2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தாயின் மடியில்
31.07.1938

இறைவனடியில்
22.12.2007

அமரர்

# அதிசயராசா புஸ்பமலர்

## திதி வெண்பா

முத்திரை பதித்த சர்வசித்து வருஷம்தன்னில்
மார்கழி மாத வளர்பிறை – சதுர்த்தசியில்
இத்தரை போற்றிய புஸ்பமலர் தானும்
சிவனடி அடைந்த தினம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

திருமதி. அதிசயராசா புஸ்பமலர்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்


21.01.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்

நாங்கள் பிறந்தது முதல் பாதுகாத்து
வளர்த்து நல்ல கல்வியையும்
அதன் மூலம் நல்ல வாழ்க்கைத்
தொழிலைப் பெறவும்
சீரும் சிறப்புமாக வாழ்வும் நல்லறிவும்
பண்புள்ள கணவனையும், மனைவியையும்
பெறவும், உலகில் உயிர் நீங்கும் வரை
எங்கள் நலஉரிமையில் கண்ணும் கருத்துமாக
எம்மைப் பாதுகாத்து எங்களுக்கு
கண்கண்ட தெய்வமாக விளங்கிய
எங்கள் அம்மாவுக்கு
இக் கண்ணீர் பூக்களை
எங்கள் அன்புக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்
ஓம் சாந்தி!

இங்ஙனம்
மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அதிசயராசா புஸ்பமலர்
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

மானுட வாழ்வில் இறப்பு நிச்சயம். ஆனால் தாம் வாழ்ந்த காலத்தில் நற்பயன் செய்து நானிலம் போற்ற வாழ்ந்த மானுடர்களில் இவரும் ஒருவர். இவருடன் வாழ்ந்தவர்கள் இவரை எளிதில் மறந்து விடமுடியாது.

மாண்பு மிக்க இவர் மரணித்தும் எம்முடன் வாழ்கிறார். ஈழமணித்திருநாட்டில் தமிழரின் தாயகம் யாழ்நகர் நவாலியம் பதியில் ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் அருட்கடல் நிறைந்த நவாலியைப் வசிப்பிடமாகக் கொண்ட அமரர் தர்மலிங்கம் அவர்களுக்கும் நவாலியைப் பிடப்பிடமாகக் கொண்ட அமரர் செல்வரத்தினம் அவர்களுக்கும் சிரேஷ்ட புதல்வியாக 31.07.1938ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பின் கமலாம்பிகை, யோகானந்தன், அஷ்டலஷ்மி, யோகசித்தன் ஆகியோர் பிறந்தனர்.

இவரது தந்தையார் ஸ்ரீ சிந்தாமணி விநாயகரது பாதம் போற்றி அக்கோயிலில் சரியைத் தொண்டு ஆற்றிவந்தவர் அவரைப் பின்பற்றி அமரரும் அக்கோயிலில் தொண்டுகள் ஆற்றி வந்தார். வளரும் பருவத்தில் கல்வி அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். உரிய பருவம் எய்தியதும் யாழ் போதனா வைத்தியசாலையில் பரிசாரகராக கடமை ஆற்றியவரும், உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொண்ட அமரர் அற்புதரட்ணம் பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் அதிசயராசா அவர்களை 23.01.1961ஆம் ஆண்டு அமரர் கரம்பிடித்தார். இனிய இல்லற வாழ்வின் இலக்கணமாக மும்முத்துக்களைப் பெற்றெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியழகன், பூவழகி, மதிவர்ணன் ஆகியோர் ஆவார். மதியழகனுக்கு அட்டலட்சுமியை மணமுடித்து வைத்தனர். இனிய இல்லற வாழ்வின் பயனாக மயூரன், மதுராஜ் ஆகியோரைப் பெற்றெடுத்து பாலூட்டி சீராட்டி வளர்த்து வந்த வேளை அட்டலட்சுமி இறந்தார். பிள்ளைகளின் எதிர்காலம், சிறுவயது என்பவற்றைக் கருதி மூத்தமகனுக்கு இரண்டாவதாக வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லம்மாவை மணம்முடித்து வைத்தனர். இதன் பேறாக விதுஷன் பிறந்தார்.

அமரரது செல்லமகளான பூவழகி அமலநாதனைக் கரம்பிடித்து இனிது வாழ்ந்து கபில்தேவ், ஹம்சினி, புவிறாஜ், ஷர்மிளா ஆகியோரை செல்வங்களாகப் பெற்றெடுத்தனர்.

மூன்றாவது மகனும், ஆசை மகனுமாகிய மதிவர்ணன் தயானந்தலஷ்சுமியை கரம்பிடித்து றஜீதா, தாரணி, மயூரி, தர்சிகா, பிரிந்தா போன்றோரைப் பெற்றெடுத்து பிரான்ஸில் பல்பேறும் பெற்று வாழ்கின்றார்.

அமரர் தன் இறை தொண்டை நிறுத்தி விடாது தொடர்ந்து நவாலி அந்திரான்பதி முருகமூர்த்தி கோவிலில் ஆற்றிவந்தார். பின் தன் இறுதி காலம் வரை மாவடி ஞானவைரவருக்கு தினம் தோறும் சரீரரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ உதவிகளைச் செய்து 22ஆம் திகதி மார்கழி மாதம் 2007ஆம் ஆண்டு சதுர்த்தசி திதியில் பிள்ளைகள், உற்றார், உறவினரை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தி சிவபதம் அடைந்தார்.

"அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நவாலி
ஸ்ரீ சிந்தாமணி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் புலம்பல்

பத்து திங்கள் உங்கள் அங்கமெல்லாம் நொந்து
பெற்றெடுத்த மூன்று முத்துகளாம் நாம்
தந்தையாய் தாயுமாய் எத்துயர் வந்தபோதும்
தாங்கி நின்ற இனியவளே - இன்று
எம்மை தவிக்கவிட்டு பரமன் பதம் சென்றது ஏனம்மா?

பாசமும் நேசமும் எம்மில் வைத்தீர் - நாம்
படுத்துறங்க பல கதைகள் சொல்வீர்
பாடசாலை சென்றிடு சான்றோனாக நீதிகழ - என
கூறிடுவீரே தினம் எமக்கு - அம்மம்மா
நாம் பாடசாலை விட்டு வரும் போது எமக்காக
காத்து நிற்க இனி யாரம்மா?......

மறுவாழ்வு பெற்று நாம் வந்தோம் மருமக்களாய்
உம் பாசத்தால் நாம் ஆனோம் உம் மக்களாய்
கலங்கரை விளக்காய் எமக்கு வழிகாட்டினீர்
உம் அன்புக்கு அடிமையாகினோம் - மாமி
அத்தனை இன்று இழந்து விட்டோமே
அணையாது என நினைத்த உம் உயிர்
இன்று அணைந்தாலோ யாம் பிரார்த்திக்கின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பஞ்ச புராணம்

## தேவாரம்

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

## திருவாசகம்

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசர்க் காட்செய்மின் குழாம் புகுந்து
தண்ணங்கடந்த பொருளள விலதோ ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நிர்மலி வேணியன்
அழகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இயலிசையி லுசித வஞ்சிக்(கு) அயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரிய மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறிவு மன்பைத் தருவாயே
மயில்தகர்க லிடைய ரந்தித் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே!

திருச்சிற்றம்பலம்.

## நற்சிந்தனை

அங்கையிற் போதுகொண் டெப்போதும் போற்றும் அடியவர்கள்
தங்குறை தீர்க்கும் தயாநிதி யேசத்தி வேல்முருகா
பங்கயனைக்குட்டி முன்சிறை வைத்திட்ட பாலகனே
திங்கட் கிழமை வருவாய்நல் லூரில் வாழ்தேசிகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே. எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பருக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானாம் நாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாயெனைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய்யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.
சிவபுராணம் முற்றிற்று.



# விநாயகர் அகவல்

## காப்பு

**அற்புதவி நவயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்
சொற்கொருளெல் லாங்கடந்து தூய்தாம் மெஞ்ஞானமிகு
கற்பக விநாயகன்றான் காப்பு**

சீதக் கடபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசைப் பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாராக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்கச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாவிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூலும் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
மும்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தனில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாட் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடையிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனி தெனக் கருளி
என்னை அறிவித் தெனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டுக் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆன்ந்தத் தழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின்னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீரும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையத் தந்தென்னை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பள்ளியெழுச்சி

**திருச்சிற்றம்பலம்**

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் பொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற றண்ணலங் கண்ணாம்
திரணிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
வேதநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோன்றுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனை மும்மரி யாயெங்கண் முன்வந்து
ஏதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுநதரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானிடத் தியல்பின்
வணங்கு கின்றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுநற் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொழு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பெரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருப்பள்ளி எழிச்சி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மேனி நின்றும் புரண்டிங்கண்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரம்சோதிக் கென்பா யிராப்பகல்னா
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்து
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையி ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் தலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவர் செல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய. 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங் களேபேசும்
பாலூறு தேன்வாய் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தொன்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேத்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோமாங் கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனா ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரன்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா யாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
மெய்யாமற்காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மாத்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லாமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேரோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
லங்கங் குருகினத்தாற் பின்னு மாரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்மா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார் நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண் ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் வாவுளுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

**திருவெம்பாவை முற்றிற்று.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**★ தர்மலிங்கம் + ★ செல்வரத்தினம்**

- புஸ்பமலர்
- கமலாம்பிகை + ★ நடராசா
- யோகானந்தன் + நிர்மலாதேவி
- அஸ்டலஷ்மி + யோகானந்தம்
- யோகசித்தன் + சாந்தினி

**★ அற்புதரட்ணம் + ★ பூரணம்**

- அதிசயராசா
- ★ ஜெயராசா
- தர்மராஜா + பரமேஸ்வரி
- தில்லைநடேசன் + ஜெயதேவி
- உதயகுமார் + சந்திராதேவி
- தயாளசீலன் + ரதிதேவி
- ★ சச்சிதானந்தம்

புஸ்பமலர் + அதிசயராசா

- மதியழகன் + ★ அட்டலஷ்சுமி
  - மயூரன்
  - மதுராஜ்
- மதியழகன் + நல்லம்மா
  - விதுஷன்
- பூவழகி + அமலநாதன்
  - கபில்தேவ்
  - ஹம்சினி
  - புவிராஜ்
  - ஷர்மிளா
- மதிவர்ணன் + தயானந்தலஷ்மி
  - றஜீதா
  - தாரணி
  - மயூரி
  - தர்சிகா
  - பிரிந்தா

★ அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ





# இதயம் கனிந்த நன்றிகள்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எங்கள்
நல்வாழ்விற்காய் வழியமைத்து எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயர் கொண்ட எம்
குடும்பத் தலைவி அமரர் அதிசயராசா புஸ்பமலர்
அவர்களின் மரணச் சேதியைக் கேட்டு உடன்
ஓடிவந்து உதவியவர்களுக்கும்,
இறுதிக்கிரியைகளிலும், இறுதி ஊர்வலத்திலும்
கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும்,
தந்தி மூலமும் அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இம்மலரை சிறந்த முறையில்
பதிப்பித்துத் தந்த பதிப்பகத்தினருக்கும் மேலும் சகல
வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும்
எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள்



றூபன் பிறிண்டேர்ஸ். முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்."



**இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூபன் பிறின்டேர்ஸ். முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386